**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**நாள்: 30.07.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

நாட்டின் பொருளாதாரம் 8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக முன்னேறி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அச்சுறுத்தல்களை தடுக்க, அனைவரும் இணைந்து பணியாற்ற உறுதி பூண்டுள்ளதாக, குவாட் மாநாட்டில் பங்கேற்ற மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி 15 ஆவது சட்ட பேரவையின் 5 ஆவது கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு துணைநிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது.

-----------------------------

*பிரதமர்* (18)

நாட்டின் பொருளாதாரம் 8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக முன்னேறி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். 2024-25ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டுக்கு பிந்தைய தொழில் துறையினர், படைப்பாற்றல் திறனாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் பங்கேற்ற மாநாட்டில் பேசுகையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பாதை என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இந்தியா அதிவிரைவில், 3ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும், சர்வதேச அளவில் அதிக வளர்ச்சியுடன், குறைந்த பணவீக்கத்தை கொண்ட ஒரே நாடு இந்தியா என்றும் குறிப்பிட்டார்.

இலகுவான வாழ்க்கை முறை, திறன் மேம்பாடு, வேலை வாய்ப்பு, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக

கூறினார். வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி தமது தலைமையிலான அரசு அர்ப்பணிப்புடன் தெளிவான பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

2024-25 நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம் இன்று மக்களவையில் மீண்டும் தொடங்கியது. விவாதத்தில் பங்கேற்ற பாஜகவின் தேவேந்திர சிங், இந்த பட்ஜெட் அனைவரின் வளர்ச்சியையும் உள்ளடக்கிய ஒன்றாகும் என்றும், நாடு முழுவதும் இயற்கை விவசாயத்தை

*பிரதமர்* 2 (16)

ஊக்குவிக்க, இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். சமாஜ்வாடி கட்சி உறுப்பினர் திரு. அகிலேஷ் யாதவ் கூறுகையில், இந்த ஆண்டு பட்ஜெட், வேலையின்மை மற்றும் கிராமப்புறங்களின் வளர்ச்சி குறித்து மவுனம் சாதிக்கிறது என்றும் உத்தரபிரதேசத்தில் எந்த திட்டத்திற்கும் பெரிய அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை என குற்றம்சாட்டினார். விவாதத்தில் பங்கேற்ற தேசியவாத காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. ப்ரஃபூல் பட்டேல், இந்த ஆண்டு பட்ஜெட்டில் உள்கட்டமைப்புத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாகவும், கடந்த 10 ஆண்டுகளில், நாட்டில்,

சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், மற்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்டவற்றில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், கூறினார். மத்திய அமைச்சரும், பாஜக தேசிய தலைவருமான திரு. ஜே.பி. நட்டா, சமூகத்தில் ஏழை மற்றும் விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றம், அவர்களுக்கு அதிகாரம் அளித்தல் உள்ளிட்ட அரசின் முயற்சிகளுக்கு பட்ஜெட்டில் சிறப்பு கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

இதனை தொடர்ந்து நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், மக்களவையில் இன்று பதில் அளிக்கிறார்.

-----------------------------

ஜெய்சங்கர் (11)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற குவாட் வெளியுறவு அமைச்சர் மாநாட்டில், பயங்கரவாத நோக்கங்களுக்காக புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் அச்சுறுத்தல்களை தடுக்க அனைவரும் இணைந்து பணியாற்ற உறுதி பூண்டுள்ளதாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர்

டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். அமெரிக்க வெளியுறவுச் செயலர் திரு. ஆண்டனி பிளிங்கன், ஆஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர் திரு. பென்னிவோங், மற்றும், ஜப்பானின் வெளியுறவு அமைச்சர் திரு. யோக்கோ காமிக்காவா ஆகியோருடன் இணைந்து, ஐ.நாவால் பட்டியலிடப்பட்டுள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக இணைந்து பணியாற்ற அழைப்பு விடுத்துள்ளதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

------------------------------

*ப்யூஷ் கோயல் (14)*

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்திய விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு. ப்யூஷ் கோயல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பொருளாதார அடிப்படை வசதிகளை, மத்திய அரசு வலுப்படுத்தி உள்ளதாக எடுத்துரைத்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், நாட்டின் வளர்ச்சி விகிதம் 4.4 சதவிகிதமாக சரிந்ததோடு, பணவீக்க விகிதம் உச்சத்தை எட்டியதாக அவர் குற்றம் சாட்டினார். மத்திய

அரசு நாட்டின் பொருளாதாரத்தை தவறாக கையாள்வதாக எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி தெரிவித்ததற்கு கண்டனம் தெரிவித்துள்ள திரு. ப்யூஷ் கோயல், காங்கிரஸ் தலைமையிலான ஆடசியின் போதுதான் நிதி பற்றாக்குறை, குறைந்த வளர்ச்சி, குறைந்த அளவிலான அந்நிய முதலீடுகள் போன்றவை காணப்பட்டதாகவும், ஆனால் தற்போது, நாட்டில் நிலவும் பொருளாதார வளர்ச்சியால், உலக நாடுகள் நம்மை வியப்புடன் நோக்குவதாகவும் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

*சிவராஜ் சிங் சௌகான்* (12)

வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ், 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 72 ஆயிரம் கட்டமைப்புத் திட்டங்கள் நாடு முழுவதும் மேற்கொள்ளப் பட்டதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் தகுதியுடைய பயனாளிகளுக்கு, 1 லட்சம் கோடி ரூபாய் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டதாக கூறினார். விவசாயிகளின் உற்பத்தி

பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்காக, அவற்றை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும், நாட்டின் வேளாண் வளர்ச்சி விகிதம் தற்போது 4 சதவிகிதமாக இருப்பதாகவும். கூறினார். மேலும், பெருமளவிலான உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

-----------------------------

*நீட்* (6)

நீட் யுஜி 2024 கலந்தாய்வின் முதல் சுற்று ஆகஸ்ட் 14ஆம் தேதி தொடங்கி, 23 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் இன்று மாநிலங்களவையில் பதில் அளித்து பேசுகையில் கூறினார். இதற்கான பதிவு ஆகஸ்ட் முதல் வாரத்தில் துவங்கும் என்றும் உச்சநீதிமன்ற உத்தரவின்படி, 4 சுற்றுகளாக கலந்தாய்வு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

-----------------------------

*வயநாடு (18)*

கேரள மாநிலத்தில், அதி கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் வயநாடு மாவட்டத்தின் முண்டக்கை, அட்டமாலா,

சூரமாலா பகுதிகளில் நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களை மீட்கும் பணிகளில் பேரிடர் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மீட்கப்பட்ட 71 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அம்மாநில அரசு, ராணுவ உதவிக் கோரியதை அடுத்து, பெங்களூரு மற்றும் தமிழ்நாட்டில் இருந்து பேரிடர் மீட்புக் குழுவினர் அப்பகுதிக்கு சென்றுள்ளனர். நிலச்சரிவில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் தங்களது இரங்கலை தெரிவித்துக் கொண்டுள்ளனர். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ருபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ருபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்

இருந்து 5 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*பட்ஜெட்-புதுச்சேரி (6)*

புதுச்சேரி 15 ஆவது சட்ட பேரவையின் 5 ஆவது கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு துணைநிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது. அதனைத் தொடர்ந்து, நாளை மறுநாள் துணை நிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேச உள்ளனர். வரும் ஆகஸ்ட் 2 ஆம் தேதி 2024-25 ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை நிதி நிலை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தாக்கல் செய்ய உள்ளார்.

-----------------------------

*உடற்பயிற்சிக் கூடம்* (7)

புதுச்சேரி காவல் துறையில் பணியாற்றும் காவலர்கள் பயன்பெறும் வகையில், கோரிமேட்டில் உள்ள காவலர் விளையாட்டு மைதானம் அருகே, 1 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி, உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் ஆகியோர் இன்று திறந்து வைத்து, காவல் துறைக்கு அர்ப்பணித்தனர். இந்நிகழ்ச்சியில், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், டிஜிபி

ஸ்ரீனிவாஸ், ஐஜி அஜித் குமார் சிங்லா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

------------------------------

தியாகிகள் தினம் (8)

ஆசிய கண்டத்தில் முதன் முதலில் 8 மணி நேர வேலை கேட்டு போராடி பிரெஞ்ச் ராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் 1936 ஆம் ஆண்டு இதே நாளில் உயிர் நீத்த 12 பஞ்சாலை தொழிலாளர்கள் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30 ஆம் தேதி தியாகிகள் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி புதுச்சேரி கடலூர் சாலையில் உள்ள தியாகிகள் நினைவிடத்தில் அனைத்து தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

------------------------------

மேட்டூர் 1 (15)

மேட்டூர் அணை 119 அடியை எட்டி உள்ளது. அணை விரைவில் முழுகொள்ளளவை எட்டும் என்பதால், திருச்சி, நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய

எச்சிரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒகேனேக்கல் காவிரி ஆற்றில் தற்போது நீர்வரத்து 68 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ள நிலையில், கல்லணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக நாளை தண்ணீர் திறக்கப்படுகிறது.

நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக கர்நாடக அணையில் இருந்து இன்று மாலை பெருமளவில் தண்ணீர் திறக்கப்படும் என்று மத்திய நீர் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை காரணமாக தேனி, முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து இன்று 3 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. தொடர் கனமழை காரணமாக கோவை மாவட்டம் வால்பாறை அருகே, சோலையாறு அணையின் இடது கரை பகுதியில் மண் சரிவு ஏற்பட்டதால் 2 பேர் உயிரிழந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. திற்பரப்பு அருவில் வெள்ளப் பெருக்கு காரணமாக சுற்றுலாப்

மேட்டூர் 2 (4)

பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கனமழை காரணமாக மாயாறு ஆற்றில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தெப்பக்காடு தரைப்பாலம் மூழ்கியதை அடுத்து உதகையில் இருந்து மசினிக்குடி வழியாக மைசூர் செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

-----------------------------

ஒலிம்பிக் (17)

பாரீஸ் ஒலிம்பிக் கோட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் மனு பாக்கர்-சரப் ஜோத் சிங் இணை, வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது. தென்கொரியாவின் ஓயேஜின் மற்றும் லீ வோன்ஹோ இணையை தோற்கடித்து, நம் நாட்டிற்கு 2ஆவது பதக்கத்தை இவர்கள் பெற்று தந்துள்ளனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி, மனு பாக்கர்-சரப் ஜோத் சிங் இணைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இந்த சாதனை குறித்து நாடு பெருமிதம் கொள்வதாக மிகழ்ச்சி தெரிவித்துள்ள பிரதமர், இருவரும் தங்களது அபார திறமையை வெளிப்படுத்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நாட்டிற்கு 2ஆவது பதக்கத்தை பெற்று தந்துள்ள மனு பாக்கர்-சரப் ஜோத் சிங்

இணைக்கு குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

124 ஆண்டுகளுக்கு பின்னர ஒரே ஒலிம்பிக்கில் 2 பதக்கங்களை வென்ற முதல் இந்திய விளையாட்டு வீரர் என்ற வரலாற்று சாதனையை மனு பாக்கர் நிகழ்த்தியுள்ளார். முன்னதாக, மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் மனு பாக்கர் வெண்கலம் வென்றது குறிப்பிடத்தக்கது.

ஆடவர் குத்துச் சண்டை 51 கிலோ எடைப் பிரிவில் அமித் பங்கலும், மகளிர் 57 கிலோ எடை பிரிவில் ஜெயிஸ்மினும் இன்று இரவு களம் காணுகின்றனர்.

------------------------------

*வானிலை (7)*

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று, கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்

காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-------------------------------

கிரிக்கெட் (6)

இலங்கைக்கு எதிரான டி-20 கிரிக்கெட் தொடரை ஏற்கனவே கைப்பற்றிய இந்தியா இன்று இரவு 7 மணிக்கு, இலங்கை பல்லேகலே சர்வதேச மைதானத்தில், 3ஆவது போட்டியில் இலங்கையை எதிர்கொள்கிறது.

முதல் ஆட்டத்தில் இந்தியா 43 ரன்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில், மழை காரணமாக 7 விக்கெட் வித்தியாசத்திலும், இலங்கையை வீழ்த்தி தொடரை கைப்பற்றி உள்ளது.

-------------------------------

*ரயில் விபத்து (6)*

ஜார்கண்ட் மாநிலம் பரபாம்போ மற்றும் கர்சாவா ரயில் நிலையம் இடையே, இன்று காலை ஹவுரா-மும்பை மெயிலின் 18 பெட்டிகள் தடம் புரண்டதில், 2 பயணிகள் உயிரிழந்தனர். மேலும்

பலர் காயமடைந்தனர். காயடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹவுராவில் இருந்து மும்பை சத்ரபதி சிவாஜி டெர்மினஸ் நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது, இந்த விபத்து ஏற்பட்டது. மீட்புப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டின் பொருளாதாரம் 8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக முன்னேறி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அச்சுறுத்தல்களை தடுக்க, அனைவரும் இணைந்து பணியாற்ற உறுதி பூண்டுள்ளதாக, குவாட் மாநாட்டில் பங்கேற்ற மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி 15 ஆவது சட்ட பேரவையின் 5 ஆவது கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு துணைநிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது.